# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5116/SCIC/2025**

திரு மு. அன்பரசன் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
அடையாறு,
தென்சென்னை 600 020

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 31.01.2025 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.02.2025 |
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 26.02.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 02.04.2025<br>07.05.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 28.03.2025 |
| 6. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 22.10.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், அடையார், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 31.01.2025

தேதியிட்டு அனுப்பிய மனுவில், சென்னை அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தில் தற்போது பணியாற்றிவரும் சார்பதிவாளர் திருமதி ரா. செல்வி என்பவரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்கம் முதல் கடைசிபக்கம் வரை உள்ள பக்கங்களின் நகல்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலரின் முகவரி ஆகிய தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு இரா. நாகமுத்து, பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அடையார், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரரின் 31.01.2025 தேதியிட்ட தனது சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவில் சார்பதிவாளர் திருமதி செல்வி என்பவரின் பணிப்பதிவேட்டின் நகல்களை கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் 21.02.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் கோரிய தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் 07.05.2025 தேதியிட்ட பதிலில் மனுதாரர் கோரிய தகவல்கள் தனிநபர் தகவல்கள் என்றும், அவற்றை வழங்க இயலாது என்று மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையினைக் குறிப்பிட்டு, மேற்படி தகவல்களை வழங்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக 22.10.2025 தேதியிட்டு வழங்கப்பட்ட பதிலில் மனுதாரர் தகவல்கள் கோரிய சார்பதிவாளர் திருமதி செல்வி என்பவர் தற்போது மத்திய சென்னை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மேலும் மனுதாரர் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் தகவல்கள் என்பதால் அவற்றை வழங்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய பணிப்பதிவேடு தொடர்பான விவரங்களில் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் மூன்றாம் நபர் சம்மந்தப்பட்ட தகவல்கள் அல்லாத பொதுவான தகவல்களை சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து கோரிப்பெற்று, விரைவுத்தபால் மூலம் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 30.09.2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5116/SCIC/2025</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
அடையாறு, தென்சென்னை 600 020

**மனுதாரர்**

திரு மு. அன்பரசன்,
த/பெ முனுசாமி,
எண்.90, E.H. ரோடு, சாலைமா நகர்,
வியாசர்பாடி, சென்னை 600 039

TK/PS